Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Feminist Thoughts in Poetry by Sivashankari

**Dr. S. Sathiya Bama,** Assistant Professor of Tamil, Vau Wajiha Women's College,
Kayalpattinam, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-1447-2506
**DOI: 10.5281/zenodo.6619626**

## Abstract

*Sivashankari, pen named is a proficient writer who can recreate the feelings hidden in the depths of a woman and create literature in Tamil. The woman who is respected as a mother, goddess and child in every family loses her uniqueness. Sivashankari's vision is to take the tragedies that women experience in their daily lives and find a way out of slavery. In this article, we will look at the feminist thoughts found in 'Nokkal' poetry.*

**Keywords:** Sivasankari, Nokkaal, Poetry, Feminist.

## References
[1] Sivashankari. R. *Nokkal*, Arivukkadal Pathippagam, Madurai-625003.
[2] Vairamuthu. R. *Ratha Daanam*. Surya Pathippagam, Chennai-24.
[3] Jaikumar. A. *Women and Society*, Kavitha Accakam, Mylapore.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சிவசங்கரியின் நோக்கால் கவிதையில் பெண்ணியச் சிந்தனைகள்

**முனைவர் ச. சத்திய பாமா,** உதவிப்பேராசிரிர், தமிழ்த்துறை,

வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி, காயல்பட்டணம், தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0002-1447-2506**

**DOI: 10.5281/zenodo.6619626**

**ஆய்வுச்சுருக்கம்**

*சிவசங்கரி பெண்ணின் ஆழ்மனதில் மறைந்து கிடக்கும் உணர்வுகளை மீட்டெடுத்து இலக்கியமாக படைக்கக்கூடியவர். ஒவ்வொரு குடும்பத்திலும் தாயாய், தெய்வமாய், குழந்தையாய் மதிக்கப்படும் பெண் தனக்கான தனித்தன்மையை இழந்து விடுகின்றாள். சிவசங்கரியின் நோக்கால் கவிதை பெண்கள் அன்றாட வாழ்வில் அனுபவிக்கின்ற அவலங்களை எடுத்துக்கூறி, அடிமைத்தனத்தில் இருந்து மீள வழிவகை செய்யும் நோக்கில் அமைந்துள்ளது. நோக்கால் கவிதையில் காணப்படும் பெண்ணிய சிந்தனைகளை இக்கட்டுரையில் காண்போம்.*

**திறவுச்சொற்கள்:** சிவசங்கரி, நோக்கால், கவிதை, பெண்ணியம்.

**முன்னுரை**

கவிதைகள் ஒரு பொழுதுபோக்கு அம்சமாக இல்லாமல் பெண்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறும் தளமாக உள்ளன. சிவசங்கரி பெண்ணின் ஆழ்மனதில் மறைந்து கிடக்கும் உணர்வுகளை மீட்டெடுத்து இலக்கியமாக படைக்கக்கூடியவர். ஒவ்வொரு குடும்பத்திலும் தாயாய், தெய்வமாய், குழந்தையாய் மதிக்கப்படும் பெண் தனக்கான தனித்தன்மையை இழந்து விடுகின்றாள். சிவசங்கரியின் நோக்கால் கவிதை பெண்கள் அன்றாட வாழ்வில் அனுபவிக்கின்ற அவலங்களை எடுத்துக்கூறி, அடிமைத்தனத்தில் இருந்து மீள வழிவகை செய்யும் நோக்கில் அமைந்துள்ளது. நோக்கால் கவிதையில் காணப்படும் பெண்ணிய சிந்தனைகளை இக்கட்டுரையில் காண்போம்.

**முதிர்கன்னி**

இளம் வயது திருமணம் ஒருபுறம் நடந்து கொண்டிருந்தாலும், முதிர்கன்னிகளின் நிலை குறைந்தபாடில்லை. பெண்களின் திருமணவயது அதிகமாகி போவதற்கு முக்கிய காரணமாக இருப்பது வரதட்சனை வாங்குவதும், சாதகம் பார்ப்பதும் ஆகும். இன்றைய கவிஞர்கள் முதிர்கன்னிகளின் அவலத்தை ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவு செய்கின்றனர்.

இந்த நிலையை கவிஞர் சிவசங்கரி,

**“பாவாடையில் சிகப்புவில்**
**மழைபெய்யவில்லை**
**நிலம் தரிசாகக் கிடக்கிறது**
**புறம்போக்குகள்**
**நிலத்தை விலைபேசுவதற்குள்**
**காத்திருக்கிறேன்**

**மழைக்கு" (நோக்கால் ப.49)**

என்ற வரிகளில் குறிப்பிடுகின்றார். முதிர்கன்னியாய் தொடரும் பெண் திருமணத்திற்காக ஏக்கத்தோடு காத்திருக்கும் அவலம் களையப்பட வேண்டுமென்றால் வரதட்சனை வாங்குவதும், சாதகம் பார்ப்பதும் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

**பெண் அடக்குமுறை**

சங்ககாலம் முதல் இக்காலம் வரை பெண் ஆணை சார்ந்தே வாழவேண்டும் என்ற சமூக கட்டுப்பாடு கடைபிடிக்கப்படுகிறது. ஆண் துணையோடு வாழ்ந்தால்தான் பெண் பாதுகாப்பாக திகழ முடியும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. பெண்ணுக்கான வன்கொடுமைகள் அதிகரித்து வருவதால் பெண்ணை வீட்டை விட்டு வெளியேற விடாமல் தடை விதிக்கப்பட்டு, அடக்கி வைக்கின்ற அவலம் காணப்படுவதை சிவசங்கரி

**"திருமணம் முடிந்தது**
**தொடர்ந்து கருவுற்றேன்**
**பிள்ளைத்தாச்சிப் பெண்**
**பத்திரமாக இருக்க வேண்டும் என்றார்கள்**
**சலிக்காமல் நான்கு பெற்றேன்**
**பிள்ளை குட்டிகாரிக்கு**
**வெளியில் என்ன வேலை என்றார்கள்**
**பேரன்பேத்தி எடுத்தேன்**
**சுடுகாட்டிற்குப் போகிறவளுக்கு**
**இந்த வேலை எல்லாம் எதற்கு என்றார்கள்**
**முட்டை உடையவே இல்லை" (நோக்கால் ப.7)**

என்ற கவிதையில் சித்தரித்துக் காட்டி, பெண்ணுக்கான சுதந்திரம் பாதுகாப்பு என்ற பெயரில் பாதிக்கப்பட்டு அடக்கப்படுவதை உணர்த்துகின்றார். பெண்கள் அடக்கப்படாமல் சுயமாக செயல்பட வழிவகை செய்ய வேண்டும்.

**விலைமகள்**

விலைமகள் ஆக எந்த பெண்ணும் விரும்புவதில்லை. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒரு பெண்ணின் வாழ்க்கைப்பாதை மாறிவிடுகிறது. பெண் தனது பாலுணர்வு இச்சையால் விலை மகளாய் ஆவதும் உண்டு. ஆடவரின் மோகத்தால் பலவந்தமாமக கற்பைப் பறிகொடுக்கப்படுவதும் உண்டு. ஆதரவற்ற வாழ்க்கை, கணவனால் கைவிடப்படுதல், காதலனால் ஏமாற்றப்படுதல், வறுமை, ஒருமுறை தவறியதால் தொடர்கின்ற நிலைக்கு தள்ளப்படுதல் போன்றவற்றாலும் விலைமகளாக நேரிடுகின்றது. பெண் விலைமகளாக ஆகின்ற போது அதற்கு காரணமாய் ஆவது ஆண்களே ஆனால் பெண்ணின் மீது பழிசுமத்தி வேடிக்கை பார்க்கின்ற நிலை உள்ளது. நம் தேசத்தை மகாத்மா காந்தி விபச்சாரத்தைப் பற்றி கூறும் போது,

**"விபச்சாரி என்றால் துர்நடத்தையுள்ள பெண்களைச் சொல்லுவதாக சாதாரணமாய் எண்ணுகிறார்கள் ஆனால் நடத்தை கெட்ட ஆடவரும் பெரிய விபச்சாரிகள் இல்லையாயினும் பெண்டிரைப் போன்ற விபச்சாரிகளே! ஏனெனில் பெரும்பாலான பெண்கள் தன் உடலைவிற்பது பிழைப்பை வேண்டியே"**

என்று கூறுகின்றார். சிறு வயதிலேயே தவறியபோது வேறு வழியின்றி தொடர்கின்ற விலைமகள் நிலையை சிவசங்கரி,

**"மனிதர்கள் தொடும் பொழுதெல்லாம்**
**நரக வேதனை**
**தினம் தினம்**
**விதவிதமான நரகம்**
**ஒவ்வொரு இரவும்**
**ஏதாவது ஒரு பெயர்கொண்ட நரகம்**
**எங்களைத் தாழிட்டுக் கொள்கிறது" (நோக்கால் ப.15)**

என்ற கவிதையில் எடுத்துரைக்கின்றார். விலைமகள் பலர் விருப்பமின்றி விலைமகளாய் தொடரும் அவலத்தை சுட்டிக்காட்டி அந்நிலை மாறவேண்டுமென்கிறார்.

**பெண்ணுக்கு அநீதி**

தாயாய், தாரமாய் குடும்பத்தை தாங்கி நிறுத்தும் துணாக வலம் வருபவர்கள் பெண்கள். காலை முதல் இரவு வரை குடும்பத்திற்காக உழைத்து உழைத்து ஓடாகிப் போகின்றவள். அப்படிப்பட்ட பெண்ணை மதித்து மரியாதை செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை. அவளை துன்புறுத்தாமலாவது இருக்கலாம். குடும்பத்தில் ஏதேனும் தீமை நடந்துவிட்டால் அதற்கான காரணத்தை அவள்மேல் சுமத்துகின்ற அவலத்தை சிவசங்கரி

**"நல்லது தவிர**
**கெட்டது நடந்துவிட்டால்**
**எங்கள் சாதகம் நோய்க்கிருமியாகும்**
**குடும்பமே படையெடுப்பார்கள்**
**நோய்க்கிருமிகளை விரட்ட**
**சோசியர் வீட்டிற்கு" (நோக்கால் ப.6)**

என்ற வரிகளில் உணர்த்துகிறார். மேலும் பெண்ணை சுயமாக செயல்பட விடாமல் தடுப்பது பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதி ஆகும். இதனை சிவசங்கரி

**"புயலோடடு பூவுக்கு என்னவேலை**
**நாளைய மலர்தலைக் கூட**
**புயலே தீர்மானிக்கும்" (நோக்கால் ப.6)**

என்ற வரிகளில் வெளிப்படுத்துகிறார்.

**ஆபத்தான நிலையில் பெண்**

பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் பெரும்பிழை இருக்குதடி தங்கமே தங்கம்! என்பது பாரதியின் வாக்கு. இவ்வாக்கு முற்றிலும் உண்மை. ஒரு பெண் பூமியில் பிறந்துவிட்டால் பிறப்பு முதல் வாழ்வின் இறுதி மூச்சுவரை எதிர்கொள்ளும் சிக்கல்கள் மிகுதி. புதிய மில்லினியம் பிறந்து ஆண்டுதோறும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. விஞ்ஞானமும் வளர்ச்சி அடைந்து வருகிறது. ஆனால் பெண்ணின் பிரச்சனை மட்டும் தீர்ந்த பாடில்லை. பிறந்தது முதல் இறப்புகள் வரை ஆண்களின் வக்கிரப் பார்வையாலும், கேலி கிண்டல்களாலும் மட்டுமின்றி கொடிய வன்கொடுமையாலும்

தாக்கப்படும் நிலைமை அதிகரித்து வருகிறது. பச்சிளம் குழந்தை முதல் வயதான பாட்டியைக் கூட காமக்கொடுரர்கள் விட்டுவைப்பதில்லை. இதனை சிவசங்கரி,

**"வீட்டைத் தாண்டினால்**

**இராவணர்கள் பலர்**

**செல்லும் இடந்தோறும்**

**அபாய எச்சரிக்கை" (நோக்கால்-ப.19)**

என்றுகூறி பெண்ணுக்கு வன்கொடுமைக்காரர்கள் பலரின் கையில் அகப்படும் அபாயம் உள்ளதை எடுத்துரைக்கின்றார். ஆபத்தான நிலையில் வாழும் பெண் அவலம் தீர வேண்டுமானால் பெண்ணுக்கு ஆபத்து ஏற்படுத்துவோருக்கு தண்டனைகளை அதிகப்படுத்த வேண்டும்.

**போகப்பொருளாய் பெண்**

பெண் பல ஆசைகளோடும் கனவுகளோடும் ஒரு ஆண்மகனின் கையை பிடித்துக் கொண்டு இல்லறவாழ்வில் அடியெடுத்து வைக்கிறாள். ஆனால் திருமணம் ஆனபின்பு பல சுமைகள் அவள் மீது சுமத்தப்பட்டு, சுதந்திரம் பறிக்கப்பட்டு, இன்பம் காண பயன்படுத்தப்படும் போகப்பொருளாக பார்க்கப்படுகிறாள். கணவனின் கொடுமையில் அகப்பட்ட பெண்ணின் அவலத்தை சிவசங்கரி,

**"வேடன் கையில் நாங்கள்**

**இனி சுதந்திரம் ஏது?**

**அவன் இச்சைக்கெல்லாம்**

**நாங்கள் இசையவேண்டும்" (நோக்கல் -ப.48)**

என்று குறிப்பிடுகின்றார். மேலும், மனைவி கர்ப்பிணியாக இருக்கும்போது தன் ஆசையை நிறைவேற்ற வேறு பெண்ணை கணவன் நாடுவதை சிவசங்கரி,

**"வயிற்றில் வளருது இன்பம்**

**காணாமல்போனது என் இன்பம்**

**மாதவி வீட்டில் அவன்**

**மணிமேகலையே இல்லாத**

**இன்பத்தைப் பெற" (நோக்கால்-ப.10)**

என்ற அடிகளில் எடுத்துரைக்கிறார். ஆணாதிக்கம் நிறைந்த கணவன்களால் பெண் போகப்பொருளாக மட்டுமே பார்க்கப்படுகிற இந்த நிலை மாறவேண்டும்.

**பெண் மறுமலர்ச்சி**

பெண்கள் திருமணம் ஆனபின்பு அடிமைப்படுத்தப்படுவதாக கூறுவது முற்றிலும் தவறு. பெண் பிறந்தது முதல் தாய், தந்தை, சகோதரன், ஆசிரியர் என அனைவராலும் பெண் பிள்ளைகளுக்கு இதை செய்யக் கூடாது அதை செய்யக்கூடாது என்று கூறி தன் உணர்வுகளை கட்டுப்படுத்த கற்றுக்கொடுக்கப்படுகிறது. இப்படி வளர்ந்த பெண் தன் உணர்வுகளை மதித்து அடிமை பூட்டை தன் கணவன் திறக்க வேண்டும் என விரும்புவதை சிவசங்கரி.

**"நீயாவது**

**உனக்காகவே**

**பூட்டப்பட்ட பூட்டை**

**உடைப்பாயா?**

**சிவதனுசுவைப் போல" (நோக்கால்-ப.52)**

என்ற வரிகளில் கூறுகின்றார். பெண்மறுமலர்ச்சி அடைய பெண்களும் ஆண்களும் சேர்ந்து வழிவகை செய்ய வேண்டும்.

**நிறைவாக**

பெண்ணின் உணர்வுகளை தீர்மானிப்பவர்களாக யார் யாரோ இருக்கின்றனர். குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவள் உணர்வுகள் மௌனமாக சாகடிக்கப்படுவதை நோக்கால் கவிதையில் சிவசங்கரி வெளிப்படுத்தி, பெண் உணர்வுகள் மதிக்கப்பட வழிவகை செய்ய முற்பட்டதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1] சிவசங்கரி.இரா. நோக்கால். அறிவுக்கடல் பதிப்பகம், மதுரை-625003.
[2] வைரமுத்து.இரா. இரத்த தானம். சூர்யா பதிப்பகம், சென்னை-24.
[3] ஜெய்க்குமார்.அ. பெண்களும் சமூகமும். கவிதா அச்சகம், மயிலாப்பூர்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.